**செய்தி வெளியீடு எண்.419** **நாள்.5.6.2008**

# ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதியோர் ஒய்வூதியத்தைப் பெறலாம்; முதலமைச்சர் கலைஞர் ஆணை!

முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ், 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் ஒய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டு வந்ததை; கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 400 ரூபாயாக 1.8.2006 முதல் உயர்த்தியது.

ஆண் வாரிசு இருந்தால் இந்த ஒய்வூதியத் தொகையினைப் பெறுவதற்கு தகுதி இல்லை என்ற நிலையை மாற்றி; ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும், தகுதியுடையவர்களுக்கு முதியோர் ஒய்வூதியத் தொகையினை வழங்கிட வேண்டுமென்று சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையினை ஏற்று, ஆண் வாரிசு இருந்தாலும் இல்லாவிட்டாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு முதியோர் ஒய்வூதியத் தொகையினை வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் இன்று (5.6.2008) ஆணையிட்டுள்ளார்.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9